**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 42/2023**

**Deposition of P.W.** 7

Name : திரு.ராஜசேகர்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.04.2026**

**All Accused Present, A6 Produced.**

முதல் விசாரணை–

நான் தற்போது மண்டைக்காடு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இத்றுக முன்னர் தக்கலை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிய போது 27.03.2021ம் தேதி காலை 04.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது தக்கலை காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. அருளப்பன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 175/2021 பிரிவு 399 இ.த.ச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு 10 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரியல்ல ½ மணி நேரம் ஆகும். சம்பவ இடத்திலிருந்து அத்தாட்சி தயார் செய்து சான்று பொருட்கள் மற்றும் புகார்மனு நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டது என்றால் சரிதான். காலதாமத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை. புள்ளி விபர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல.